Kantonsspital Aarau

Klinik für Kinder und Jugendliche / Neonatologie

# தனிமைப்படுத்தப்படும் நடைமுறைகள்

பெற்றோர்களுக்கான தகவல்

உங்கள் பிள்ளைக்கு தொற்றுநோய் ஒன்று ஏற்பட்டுள்ளது. நீங்களும் மற்றைய நோயாளர்களும் பாதுகாத்துக் கொள்ளப்படுவதற்கு ஏதுவாக, நாம் உங்களுக்கு அவசியமான தனிமைப்படுத்தப்படும் நடைமுறைகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றோம்.

**நீங்கள் (பிள்ளையைப்) பார்க்க வரும் பட்சத்தில்:**

- நீங்கள் மோதிரங்கள், காப்புகள், கைக்கடிகாரங்கள் மற்றும் வேறு நகைகளெதனையும் அணிந்து வராதீர்கள்.
- கைகழுவும் பேசினுக்கு மேலுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக உங்கள் கைகளைக் கழுவுவதுடன் நுண்ணுயிர் கொல்லும் திரவத்தைப் பாவித்து கிருமியகற்றுங்கள்.
- உங்களுக்கு சளி-தடிமல் ஏற்பட்டிருப்பின், வாய்-மூக்கு-பாதுகாப்பு உறையை அணியுங்கள்.
- இதன் பின்பே உங்கள் பிள்ளையிடம் நீங்கள் செல்ல முடியும்.
- அறையை விட்டு வெளியேறு முன் உங்கள் கைகளை நுண்ணுயிர் கொல்லும் திரவத்தைப் பாவித்து கிருமியகற்றுங்கள்.
- நீங்கள் நோயாளர் அறைக்கு வெளியே வாய்-மூக்கு-பாதுகாப்பு உறையை அணிய வேண்டுமாயின், தாதி உத்தியோகத்தர்களினால் நீங்கள் அறிவுறுத்தப்படுவீர்கள்.
- நீங்கள் (பிள்ளையைப்) பார்த்த பின் வைத்தியசாலை „*கபே*“ (Le Clou/Santerra) இல் தங்கியிருக்க **வேண்டாம்.**

**நீங்கள் தாய்ப்பால் ஊட்டுவதற்கென பெற்றோர் அறை ஒன்றுக்குச் செல்லும் பட்சத்தில்:**

- தயவு செய்து நீங்கள் மேலே குறிப்பிடப்பட்டவாறு கைகளை சுத்தமாக வைத்திருக்கும் நடைமுறைகளை தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள்.
- பெற்றோர் அறையின் இடது பக்க மலசல கூடம் உங்கள் பாவனைக்கு உள்ளது. நீங்கள் குளிக்க விரும்பினால், தயவு செய்து தாதி உத்தியோகத்தர்களைக் கேளுங்கள்.
- நீங்கள் வெளியே உள்ள நிலப்பரப்பில் (தரிப்பிடம்) தங்கியிருக்க அனுமதிக்கப்படுவீர்கள், ஆயினும் வைத்தியசாலை „*கபே*“, பொது அறைகள் (உ-ம். தாய்ப்பாலூட்டும் அறை) அல்லது மருத்துவ மனையின் *கொறிடோரில்* தங்குவதற்கு அனுமதி இல்லை.
- நீங்கள் பிரதான உணவுகள் எல்லாவற்றையும் தாதி உத்தியோகத்தர்களிடம் பேசி ஒழுங்கு செய்யலாம். உங்கள் அறைகளுக்குள்ளேயே உணவுகளை நீங்கள் உண்ண வேண்டும்.

**பொதுவான தகவல்கள்:**

- உங்களுக்கு ஒரு பால் கறக்கும் இயந்திரம் (*மார்பக பம்ப்*) தேவைப்படின், தாதி உத்தியோகத்தர் ஒருவருடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர் அதற்குரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஒழுங்குகளை மேற்கொள்வார்.
- **பார்வையாளர் ஒழுங்குவிதி:** பெற்றோர் என்ற அடிப்படையில் நீங்கள் மட்டுமே பார்க்க அனுமதிக்கப்படுகின்றீர்கள், இது இருபத்திநாலு மணி நேரமுமாகும். பெற்றோர்களின் பெற்றோர் (பாட்டன், பாட்டி) வாரத்தில் ஒரு முறை 30 நிமிடங்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

கேள்விகள் அல்லது தெளிவின்மை இருப்பின் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான (*நெஓநற்றோலோஜி*) மருத்துவக் குழுவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

30.7.19/lh